


**22.11. 2024**

## தலைப்புச் செய்திகள்

**1.** நாடு வளர்ச்சி அடைய குடிமக்கள் தேச நலனிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

**2.** ஃபிலிப்பைன்ஸ் நாட்டுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தி விரிவுபடுத்த இந்தியா உறுதிபூண்டிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

**3.** திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் 330 கோடி ரூபாய் செலவில் புதிய தகவல் தொழில்நுட்ப பூங்காவை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்துள்ளார்.

**4.** தமிழக உயர்கல்வித்துறை 47 சதவிகித வளர்ச்சியுடன் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் கூறியுள்ளார்.

**5.** பெர்த்தில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 150 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

## இனி விரிவான செய்திகள்

*********

### குடியரசுத்தலைவர்

நாடு வளர்ச்சி அடைய குடிமக்கள் அனைவரும் தேச நலத்திற்கு முன்னுரிமை அளிக்கும் அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் 4ஆவது சர்வதேச கலாச்சார விழாவை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், இந்திய கலாச்சாரம், மொழிகள், பாரம்பரியம்,

அறிவுதிறன் ஆகியவற்றிற்கு புத்துயிர் அளிப்பதன் மூலம் வேற்றுமையில் ஒற்றுமைக்கு வகை செய்ய முடியும் என்றார்.

அடிமைத்தன மனபாங்கு களையப்பட்ட பின்னர், சமூக ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்படும் என்று கூறிய அவர், புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்கள் மூலம், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை சுட்டிக்காட்டினார்.

*********

**ராஜ்நாத்சிங்**

லாவோஸ் தலைநகர் வியன்டியானில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் ஜென்ரல் **Nikatani**-யுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

வெளிப்படையான உள்ளடக்கிய இந்தோ பசிபிக் பிராந்தியத்திற்கு இந்திய - ஜப்பான் நாடுகளின் நட்புறவு முக்கிய பங்காற்றும் என்று திரு.ராஜ்நாத்சிங் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஃபிலிப்பைன்ஸ் நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் **Gilberto**-வையும் சந்தித்து பேசிய திரு.ராஜ்நாத்சிங், இந்தியாவின் கிழக்கு சார் கொள்கை மற்றும் இந்தோ பசிபிக் பிராந்திய தொலைநோக்கு பார்வையில் ஃபிலிப்பைன்ஸ் முக்கிய பங்குதாரநாடு என்று எடுத்துரைத்தார்.

ஃபிலிப்பைன்ஸூடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தி விரிவுபடுத்த இந்தியா உறுதி பூண்டிருப்பதாகவும் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

*********

**காலநிலை – அமைச்சகம்**

அஸர்பைஜான் நாட்டின் பாஹூவில் காலநிலை மாற்ற கூட்டத்தில், காலநிலை மாற்றங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு அனுமதியிலிருந்து சவால்களை எதிர்கொள்ளும் வகையில் கவனம் மாற்றப்பட்டதை ஏற்க இயலாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ஐ.நா. வரையறை செய்துள்ள கட்டமைப்பின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய வனம் பருவநிலை மாற்ற அமைச்சகம், சுட்டிக்காட்டியுள்ளது.

காலநிலை மாற்றங்களால் தென்னாடுகள் தொடர்ந்து பாதிக்கப்படுவதாக அமைச்சகம் எடுத்துரைத்துள்ளது.

பருவநிலை மாற்ற நிதிக்கான ஒருங்கிணைந்த இலக்கு, சவால்களை எதிர்கொள்ளும் செயல் திட்டம், மாற்றங்கள், உலகளாவிய நிலைப்பாடுகள், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நடவடிக்கைகள் ஆகிய ஐந்து அம்சங்களை கொண்டு

காலநிலை மாற்ற சவால்கள் எதிர்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்தியா கூறியுள்ளது.

நிதி ஒதுக்கீடுகள் இன்றி வெறும் பேச்சுவார்த்தைகளால் எப்பயனும் ஏற்படாது என்றும் அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

*********

**தேர்தல்**

மஹாராஷ்ட்ரா, ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை காலை 8 மணிக்கு தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

இவற்றுடன் அஸ்ஸாம், பீகார், சட்டிஸ்கட், குஜராத், கர்நாடகம், கேரளம், மத்திய பிரதேசம், மகராஷ்டிரம், மேகாலயா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம், உத்திரபிரதேசம், மேற்குவங்கம் உத்திரகாண்ட் ஆகிய 48 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும்,

கேரள மாநிலம் வயநாடு மற்றும் மகராஷ்டிர மாநிலம் Nanded மக்களவை தொகுதிகளுக்கும் நடைபெற்ற இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையும் நாளை நடைபெறுகிறது.

*********

**பாதுகாப்பு படையினர்**

சட்டிஸ்கட்டில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது 10 மாவோயிஸ்ட்டுகள் கொல்லப்பட்டனர்.

மத்திய ரிசர்வ் காவல்படையினர் மற்றும் சட்டிஸ்கட் மாவட்ட காவல்துறையினர் இணைந்து சுக்மா மாவட்டத்தின் கோண்ட்டா பகுதியில், தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இச்சம்பவம் நேரிட்டது.

உயிரிழந்தோரிடமிருந்து **ஏ.கே.47 ரக** துப்பாக்கி உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன.

*********

**முதலமைச்சர்**

திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் 11 ஏக்கர் பரப்பில் 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 21 தளங்களுடன் கூடிய புதிய தகவல் தொழில்நுட்ப பூங்காவை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

ஆறாயிரம் பேர் பணிபுரியும் வகையில் பசுமை கட்டிடமாக இப்பூங்கா வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் 18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் தொழில்நுட்ப மையத்தையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

*********

**கோவி செழியன்**

தமிழக உயர்கல்வித்துறை 47 சதவிகித வளர்ச்சியுடன் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று நடைபெற்ற உயர்கல்வி தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், சென்னைக்கு அடுத்தபடியாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பதில் கோவை மாவட்டம் முன்னிலையில் இருப்பதாக குறிப்பிட்டார்.

உயர்கல்வி பயில்வதில் மாற்றுத்திறனாளி மாணாக்கர் சந்திக்கும் இடர்பாடுகள் கேட்டறிந்து களையப்படும் என்றார்.

நான் முதல்வன் திட்ட பயனாளிகளின் நிலை குறித்து கேட்டறிந்து அதற்கு ஏற்றார் போல் இத்துறை அடுத்த கட்டத்திற்கு மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

உயர்கல்வித்துறையை மேம்படுத்த சென்னை - கோவை - மதுரை - திருச்சி என நான்கு மண்டலங்களாக பிரித்து கல்வி நிறுவன நிர்வாகத்தின் கருத்துக்களும், கோரிக்கைகளும் கேட்டறியப்படும் என்றும் திரு.கோவி செழியன் கூறினார்.

*********

**கே.என்.நேரு**

திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனைய வளாகத்தில் 17 கோடியே 60 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று துவக்கிவைத்தார்.

82 பேருந்துகள் நிற்கும் வகையில் இந்த ஆம்னி பேருந்து நிலையம் கட்டப்பட உள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

*********

### முத்துசாமி

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் பகுதியில் **நல்லா ஓடையில்** சாயக்கழிவு நீர் தடுக்கும் வகையில் உப்பின் தண்மையை கண்டறியும் கருவி அமைப்பதற்கான பணிகளை மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி இன்று துவக்கிவைத்தார்.

இவ்வளாகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் செயல்பட்டு வரும் நிலையில் 2 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இக்கருவி அமைக்கப்பட உள்ளது.

இப்பணிகளை விரைந்து முடிக்க மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

*********

### கிராம சபை கூட்டம்

தமிழகத்தில் கிராம சபை கூட்டங்கள் நாளை நடைபெறும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படும்.

கடந்த ஒன்றாம் தேதி உள்ளாட்சி தினத்தன்று நடைபெற இருந்த கிராம சபை கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் இக்கூட்டம் நாளை நடைபெற உள்ளது.

*********

### பழங்குடியினர் முகாம்

சுதந்திர போராட்ட வீரர் பிர்ஸா முண்டாவின் பிறந்த நாள் விழாவின் ஒருபகுதியாக நாமக்கல் மாவட்டம் போதமலை கொல்லிமலை உள்ளிட்ட பகுதிகளில் பழங்குடியினர் பெருமை தின சிறப்பு முகாம்கள் நடைபெறுகிறது.

இதில் மத்திய அரசின் திட்டங்கள் மூலம் பழங்குடியினர் பயனடைவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

### வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் இரண்டாவது கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்த முகாம் நாளையும், நாளை மறுநாளும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற உள்ளன.

வரும் ஜனவரி ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு நடைபெறும் இம்முகாம்களில் புதிய வாக்காளர்கள் தங்களது பெயரை பதிவுசெய்து கொள்ளலாம்.

மேலும் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைத்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்டவற்றிற்கும் இதில் விண்ணப்பிக்கலாம்.

இதனிடையே பெரம்பலூரில் இளம் வாக்காளர்களை, வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தொடங்கிவைத்தார்.

*********

**ரயில் ஸ்ரீவத்சவா**

தாம்பரம் - செங்கோட்டை ரயில் மானாமதுரை ரயில் நிலையத்தில் நின்று செல்ல பரிந்துரைக்கப்படும் என்று மதுரை கோட்ட மேலாளர் திரு.ஸ்ரீவத்சவா தெரிவித்துள்ளார்.

ரயில் விபத்துகளை தவிர்ப்பது குறித்து சிவகங்கை மானாமதுரை ரயில் சந்திப்பில் விளக்க உரையாற்றிய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ரயில் தண்டவாளங்களை சேதப்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

*********

**இருவரி**

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில்** சென்னையில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்கள் விற்பனை நாளையும், நாளைமறுநாளும் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற உள்ளது.

**சிவகங்கை மாவட்டத்தில் கபீர் புரஸ்கார் விருது** பெற தகுதியுடையவர்கள் அடுத்த மாதம் 15ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**ராணிப்பேட்டை மாவட்டத்தில் பள்ளி** மாணவர்கள் கடிதம் எழுதும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தலைமை தபால் நிலையத்தில் மினி மாரத்தான் விழிப்புணர்வு ஓட்டம் இன்று நடைபெற்றது.

*********

**கும்பகரை**

தேனி கும்பக்கரை அருவியில் நீர்வரத்து சீரானதை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு வனத்துறை அனுமதி வழங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதேபோல் குற்றால அருவியிலும் வெள்ளப்பெருக்கு குறைந்ததால் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

*********

**காட்டு யானை**

கொடைக்கானல் மலைபகுதியில் கடந்த ஒருவாரத்தில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்ததை அடுத்து மலை பகுதிகளில் உள்ள பூச்சிகொல்லி மருந்துகடைகளில் அரசின் நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று வனத்துறையினர் உத்தரவிட்டுள்ளனர்.

*********

**வானிலை**

தென்கிழக்கு வங்க கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி, அடுத்த இரண்டு தினங்களில் தெற்கு வங்க கடல் பகுதியில் இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த 3 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

வரும் 25ஆம் தேதி தொடங்கி 3 நாட்களுக்கு டெல்டா மாவட்டங்கள், கடலூர், புதுக்கோட்டை ராமநாதபுரம் மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் கன மழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

*********

**கிரிக்கெட்**

பெர்த்தில் இந்தியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 3 விக்கெட் இழப்பிற்கு 30 ரன் எடுத்திருந்தது.

அபாரமாக பந்து வீசி பும்ரா துவக்கத்திலேயே 3 விக்கெட்டை வீழ்த்தியுள்ளார்.

முன்னதாக டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா தனது முதல் இன்னிங்சில் 150 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

*********

**பேட்மிண்டன்**

சீன மாஸ்டார்ஸ் பேட்மிண்டன் காலிறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென், டென்மார்க்கின் Anders Antonsen-ஐ இன்றுமாலை எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை – டென்மார்க் இணையை எதிர்கொள்கிறது.

*********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

*********